www.padippakam.com



# விரதச் சாப்பாட்டை மறைத்துச் சாப்பிட்ட இந்துக்கள்

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

### வரலாற்றுத் தொடர்

34

ஒலிவேரா காலத்தில் யாழ்ப்பாண மக்கள் அதிகளவிற்கு கிறிஸ்தவர்களாக மதம் மாறியதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1. யாழ்ப்பாண இந்து சமூக அமைப்பில் நிலவிய கறாரான அடிமைத்தனம்.
2. கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு மட்டுமே அரசபதவிகள் வழங்கப்படுமென ஒலிவேரா அறிவித்தமை.

ஒலிவேராவின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த இந்து சமூக அமைப்பில், மீனவர்களும், அவர்களுக்குக் கீழ் நிலையிலிருந்த ஏனைய சாதியினரும், அவர்களுக்கு மேலிருந்த சாதியினரது அடிமை, குடிமைகளாகவே கணிக்கப்பட்டனர். சமூகத்தில் அவர்களுக்கு எந்த அந்தஸ்த்தும் கிடையாது. பரம்பரை பரம்பரையாக அவர்களது எஜமானர்களுக்கு அடிமைச்சேவகம் செய்வது ஒன்றுதான் அவர்களுக்குரிய கடமையாக வகுக்கப்பட்டிருந்தது. உழைப்பதற்குக் கூலி கிடையாது. சொந்த நிலம் வாங்கும் உரிமை கிடையாது. அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட புறம்போக்கு ஒதுக்குப்புற நிலத்திலல்லாது, வேறு நிலங்களில் குடியிருக்கும் உரிமை கிடையாது. ஏட்டறிவு பெறமுடியாது. தங்களது எஜமானர்களுக்கு முன்நின்று தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு நியாயம் கேட்க முடியாது.

இவையெல்லாம் அவர்கள் முற்பிறப்பில் செய்த பாவத்தின் பயனாக அவர்களுக்குக் கிடைத்த பலாபலன், அதாவது முற்பிறப்பில் அவர்கள் பாவம் செய்ததால், இப்பிறப்பில் இழி சாதியினராகப் பிறந்து விட்டார்களென்று வியாக்கியானம் சொல்லப்பட்டது. இப்பிறப்பில் அவர்கள், தங்கள் எஜமானர்களின் மனங்கோணாது அவர்களுக்கு உழைப்பதன் மூலம், அதாவது ஏன் எதற்கு என்று கேட்காமல் அடிமைச் சேவகம் செய்வதன் மூலம் மறுபிறப்பில் உயர்சாதியில் பிறக்கலாம் என்று அதற்குப் பரிகாரமும் சொல்லப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு முதலில் கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் செய்ய வந்த பிரான்சிஸ்கன் சபையினர், இந்த சமூக முரண்பாட்டை சரியாகப் புரிந்து வைத்துக்கொண்டு, தங்களது மதமாற்ற பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். 'கஷ்டப்பட்டுப் பாவம் சுமக்கிறவர்களுக்கு விடுதலையளிப்பவர் யேசுநாதர். அவர் அன்புமயமானவர். அவர் யாரிடத்திலும் பாகுபாடு காட்டுவதில்லை. பகைவனிடத்திலும் அவர் அன்பு செலுத்தும்படி சொன்னவர். அவர் எல்லாத் துன்பங்களிருந்தும் நமக்கு விடுதலையளிக்கக் கூடியவர்' என்று இவர்கள் இந்த மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தார்கள். அத்தோடு அவர்களுடைய அழுக்கடைந்த சேரிப்புறங்களைத் தேடிச்சென்று அவர்களைத் தொட்டு ஆசீர்வதித்து ஆறுதலும் சொன்னார்கள்.

இவையெல்லாம் உண்மையிலேயே அந்த மக்களுக்கு மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சிகளாக இருந்தன. ஒரு இந்து மத குரு தெருவில் வந்தால் அவர்கள் எட்டடி தூரம் தள்ளி நின்று, தோள் துண்டை எடுத்து கக்கத்தில் வைத்துக்கொண்டு கூனிக் குறுகி நின்று மரியாதை செலுத்தவேண்டியிருந்தது. வயது குறைந்தவர்கள் கூட வயது முதிர்ந்த இவர்களை வாடா போடா என்று ஒருமையில் அழைத்ததையும், வசவு வார்த்தைகளால் திட்டியதையும் விதிப் பலன் என்று எதிர்ப்பேதும் காட்டாமல் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. மாறாக, கிறிஸ்தவ மதகுரு ஒருவர், அதுவும் வெள்ளைக்காரர் தங்களுடைய அழுக்கான குடிசைகளைத் தேடி வந்து, தங்களிடம் அன்பொழுகப் பேசி, தங்களைத் தொட்டு ஆசீர்வதித்து, தன்னுடைய கோயிலுக்கு வருமாறு தங்களை அழைத்த செயலானது, அந்த மக்களைப் பொறுத்தவரை, அவர்களது வாழ்வில் கிடைத்தற்கரிய பெரும் பேறாக இருந்தது. தங்களுக்கு இந்தப் பெரும் பேற்றை அளித்த கிறிஸ்தவ குருவை தங்களது இரட்சகராகவும், தங்களுக்கு விடுதலையளிக்க வந்த தெய்வீக மனிதராகவும் அவர்கள் கருதினார்கள். இதனால் பிரான்சிஸ்கன் சபை எதிர்பார்த்ததை விட அதிகளவு மக்கள் குடும்பம் குடும்பமாகவும், கிராமம் கிராமமாகவும் அவர்களது மதத்தில் சேர ஆரம்பித்தனர்.

**போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடி, அவர்களுடைய இந்துமத அழிப்புக்கு எதிராகப் போராடி இழந்த யாழ்ப்பாண அரச உரிமையை மீட்பதற்குப் பதில் ஒலிவேராவிடமிருந்து அரச உயர் பதவிகளைப் பெற்று தங்கள் சமூக அந்தஸ்தை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்காக பலர், தாங்களும் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துகொண்டார்கள்.**

அக் காலத்தில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முதல் முதலில் ஐரோப்பாவிலிருந்து வந்த பிரான்சிஸ்கன் சபையோடு, யேசு சபை, டொமினிக்கன் சபை என்ற வேறு இரண்டு அமைப்புக்களும் குடாநாட்டுக்கு வந்திருந்தன. இந்த மூன்று அமைப்புக்களினதும் நடவடிக்கைகள் ஒன்றோடு ஒன்று குறுக்கிட்டு முரண்பாடுகளைத் தோற்றுவிக்காத வகையில், பிரான்சிஸ்கன் சபை கரையோரக்கிராமங்களிலும், யேசு சபை தரைப் பகுதிக் கிராமங்களிலும், டொமினிக்கன் சபை யாழ்ப்பாண நகரத்திலும் தங்களுடைய மதப் பிரச்சார, மதமாற்ற நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு ஒலிவேரா அனுமதியளித்திருந்தான். இந்த மூன்று சபைகளும் செயலாற்றுவதற்கு தேவைப்பட்ட நிதியையும் அவனே வழங்கி வந்தான்.

குடாநாட்டில் முதல் கிறிஸ்தவத் தேவாலயம் கி.பி. 1602ம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த கண்ணாடிப் பாதிரியார் என்று அழைக்கப்பட்ட பேதுரு து பெத்தான்கோர் (PEDRO DE BETANCOR) என்பவரால் ஊர்காவல்துறையில் கட்டப்பட்டது. முதலில் சிறியதாக கட்டப்பட்ட இத்தேவாலயம் பின்னர் கி.பி. 1614-ல் அப்போது யாழ்ப்பாண அரசனாயிருந்த எதிர்மன்னசிங்கப்பரராசசேகரனால் தானமாக அளிக்கப்பட்ட நிலத்தில் - மிகப் பெரியதாகக் கட்டப்பட்டது. அதன் பின்பு ஒலிவேரா ஆட்சியில் - கி.பி. 1621க்கும் 1623க்கும் இடைப்பட்டகாலத்தில் தற்போது அற்புதமாதா என்று அழைக்கப்படும் - வெற்றிமாதா கோவில் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டது. இந்தக் கோவிலைக் கட்டியவர்கள் பிரான்சிஸ்கன் சபையினர். இவர்கள் இதேகாலத்தில் புத்தூர், பருத்தித்துறை, சாவகச்சேரி, கட்டைவேலி, வேலணை, அல்லைப்பிட்டி, இளவாலை ஆகிய இடங்களிலும் கிறிஸ்தவக் கோவில்களைக் கட்டியுள்ளனர். கொழும்புத்துறையில் இவர்களால் கட்டப்பட்ட சென். சுவான் கோவிலே பின்னர் சுண்டிக்குளிக்கு மாற்றப்பட்டது. இவற்றைவிட மன்னாரிலும் இவர்களால் 5 தேவாலயங்கள் கட்டப்பட்டன.

யேசுசபையினர் முதன்முதலாக கி.பி. 1627க்கு முன் காரை நகரில் ஒரு தேவாலயத்தைக் கட்டினார்கள். அதன்பின் வட்டுக்கோட்டை, சங்கானை, பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, மயிலிட்டி, அச்சுவேலி, புலோப்பளை, சுண்டிக்குளம், முகமாலை, தம்பகாமம் ஆகிய 10 ஊர்களிலும் 10 கோவில்களைக் கட்டினார்கள். இக்காலத்தில் கிளாலிக் கரையில் முகமாலைக் குருவின் மேற்பார்வையில் இருந்த ஒரு சிறு தேவாலயத்தில் பல அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும், அநேகர் அந்த தேவாலயத்திற்கு யாத்திரை போனார்கள் என்று யேசு சபையினர் எழுதி வைத்துள்ளனர்.

ஒலிவேராவின் காலத்தில் உருவாகிய அநேகமான கிறிஸ்தவ தேவாலயங்கள் அங்கிருந்த இந்து ஆலயங்களை இடித்துத் தள்ளியபின் அவையிருந்த இடத்தில் கட்டப்பட்டவையாகும். சாவகச்சேரியில் வாரிவன ஈஸ்வரன் கோவிலும், மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலும், நல்லூர் யமுனாரிக்கரையில் நல்லூர் கந்தசாமி கோவிலும், இருந்த இடத்திலேயே அவை இடிக்கப்பட்ட பின் தற்போதுள்ள கிறிஸ்தவத் தேவாலயங்கள் கட்டப்பட்டன. அதுபோல் புத்தூரிலுள்ள புராதன தமிழ் பௌத்த விகாரை இடிக்கப்பட்ட பின்பும் கோப்பாயிலுள்ள தமிழர் அரண்மனை இடிக்கப்பட்ட பின்புமே அங்குள்ள கிறிஸ்தவக் கோவில்கள் கட்டப்பட்டன.

கி.பி. 1621ம் ஆண்டு - இந்து மதத்தை கடைப்பிடிப்பதையும் இந்து விக்கிரங்களை வைத்து வழிபடுவதாயும் ஒலிவேரா தடைசெய்தால் - உண்மையான இந்துக்களாக இருந்த நடுத்தர மக்களும் கீழ்த்தட்டு மக்களும் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள்.

கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து ஞானஸ்நானம் பெறுபவர்களுக்கே - அரசபதவிகள் என்று அறிவித்ததால் யாழ்ப்பாணக் குடாநாட்டு சமூக அமைப்பின் மேற்தட்டுப் பிரிவிலிருந்தவர்களுக்கு பெரிய நெருக்கடி ஒன்று ஏற்பட்டது. ஏற்கனவே - அவர்களால் சமூக ரீதியாக ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த மீனவர்களும், ஏனைய அடிமட்ட சமூகத்தினரும் பெருமளவுக்கு கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துவிட்டதால் அரச பதவிகள் அவர்களுக்கு சென்று விடும் என்று அவர்கள் அஞ்சினார்கள். அவ்வாறு அரச உயர் பதவிகளுக்கு அவர்கள் வந்துவிட்டால் தமது சமூக அந்தஸ்த்து தகர்ந்துவிடும் என்ற பயம் அவர்களுக்கு ஏற்பட்டது.

போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடி, அவர்களுடைய இந்துமத அழிப்புக்கு எதிராகப் போராடி இழந்த யாழ்ப்பாண அரச உரிமையை - மீட்பதற்குப் பதில் ஒலிவேராவிடமிருந்து அரச உயர் பதவிகளைப் பெற்று தங்கள் சமூக அந்தஸ்தை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்காக பலர், தாங்களும் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துகொண்டார்கள். இவ்வாறு மதம் மாறிப் பதவி பெற்ற பலர் - கிறிஸ்தவ முறைப்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாலும் - அவர்களது கட்டளைப்படி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் தவறாது தேவாலயத்திற்கு சென்று வந்தாலும் - இரகசியமாக தங்கள் வீடுகளில் - நடராஜா - பிள்ளையார் - முருகன் விக்கிரகங்களை வைத்து வழிபட்டு வந்ததாகவும், அமாவாசை விரதம், பிரதோச விரதம், வெள்ளிக்கிழமை விரதம் ஆகியவற்றை அனுஷ்டித்து வந்ததாகவும் வரலாற்றுக்குறிப்புகளில் காணப்படுகிறது.

ஆனால், இந்து மதத்தையே முற்று முழுதாக நம்பிய மேற்தட்டு மக்களில் ஒரு சிறு பகுதியினரும், பெரும்பாலான நடுத்தர மக்களும், குறைந்தளவு கீழ்த்தட்டு மக்களும் - ஒலிவேராவின் ஆட்சியில் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளானார்கள். இவர்கள் தாங்கள் வழிபட்ட இந்துக்கோயில்களிருந்த விக்கிரகங்களையெல்லாம் கிணறுகளுக்குள் போட்டுவிட்டும், நிலத்துக்குள் புதைத்துவிட்டும், சில மரங்களை விக்கிரகங்களுக்கான குறியீடாக வைத்துக்கொண்டும், வீட்டின் ஒரு அறையை அல்லது தங்களது காணியின் ஒரு மூலையை வழிபாட்டுக்குரிய இடமாக விக்கிரகங்களோ - பூசைப்பொருட்களோ எதுவுமே இல்லாமல் - கோவிலாக நினைத்துக்கொண்டு வழிபாடு நடாத்திவந்தார்கள்.

ஒலிவேரா எங்காவது இந்த வழிபாடு நடக்கிறதா என்பதை அறிய நாடு முழுவதும் ஒற்றர்களை நியமித்திருந்ததால் இந்த மக்கள் விரத காலத்தில் சாப்பிட்ட இலைகளை வெளியில் எறிந்தால் - பிடிபட்டுவிடுவோம் என்பதற்காக தங்கள் வீட்டுக் கூரைகளுக்கும் வேலிகளுக்குள்ளும் இரகசியமாக செருகிவந்தார்கள். தேவாரம், திருவாசகம், கந்தபுராணம், இராமயணம், மகாபாரதம் முதலான இந்து மத ஏடுகள் எல்லாம் நிலத்துக்குள் புதைத்து வைத்தே அவ்வப்போது எடுக்கப்பட்டன.

- நக்கீரன்

படிப்பகம்